# மலேசியாவிற்காக மன்றாடுங்கள்!



## இயேசுவோடு ஒரு மணி நேரம்!

**"...ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?"**

(மத்தேயு 26:40)

# உங்கள் சகோதரனிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

அருமை ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

மலேசியா தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக திருச்சபையின் எழுப்புதலுக்காக ஜெபித்து வருகிற உங்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். ஜெபத்தில் சோர்ந்து போகாதீர்கள் தொடர்ந்து ஜெபியுங்கள்.

உங்கள் ஜெப வேளைகளில் பயன்படுத்துவதற்காக இந்த சிறிய ஜெப கையேட்டை தயாரித்திருக்கிறோம். அனுதினமும் இந்த ஜெபக் குறிப்புகளை பயன்படுத்தி ஜெபியுங்கள். தினந்தோறும் ஒரு மாநிலத்திற்காக அதிலுள்ள மக்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள்.

அனுதினமும் அதிகாலை 5:00 – 6:00 மணி வரையுள்ள தனி ஜெப வேளையை தவற விடாதீர்கள். வாரத்தில் ஒரு நாள் குழுவாக கூடி இந்த ஜெபக் குறிப்பை பயன்படுத்தி ஜெபியுங்கள் உங்கள் ஜெபமே மலேசியா தேசத்தில் ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் கொண்டு வரும்.

உங்களுக்காக நானும் 'இயேசு விடுவிக்கிறார்' குழுவினரும் ஜெபிக்கிறோம். எங்களுக்காக நீங்கள் வேண்டிக் கொள்ளுங்கள்.

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்.

Mohan C L.



# ஒரு மணி நேரம் ஜெபிப்பது எப்படி?



**15 நிமிடங்கள்!**

ஒரு சில பாடல்களைப் பாடி, தேவனைத் துதியுங்கள்!

**பிதாவாகிய தேவன்!**

அவருடைய நாமங்களை, அவர் செய்த அதிசயங்களை சொல்லி, அவரை துதியுங்கள்!

**குமாரனாகிய கிறிஸ்து!**

இயேசு கிறிஸ்துவின் நாமங்களைச் சொல்லி, அவர் செய்து வருகிற அதிசயங்களைச் சொல்லி, அவரை துதியுங்கள்.

**பரிசுத்த ஆவியானவர்!**

ஆவியானவருடைய நாமங்களை, அவருடைய கிரியைகளைச் சொல்லி, அவரை துதியுங்கள்! திரியேக தேவனாகிய கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் செய்த எண்ணி முடியாத நன்மைகளை நினைத்து, அவரை துதியுங்கள்!

**15 நிமிடங்கள்!**

பரிசுத்த வேதாகமத்தை தியானியுங்கள்!

முழங்காலில் நின்று வேதாகமத்தை வாசித்து, தியானித்து, கர்த்தர் உங்களோடு பேசுகிற வசனத்திற்குக் கீழ்படிய உங்களை அர்ப்பணித்து ஜெபியுங்கள்.

வாக்குத்தத்தத்தை சுதந்தரித்து ஜெபியுங்கள்.

முடிந்தால், தினமும் ஒரு வேத வசனத்தை மனப் பாடம் செய்து கொள்ளுங்கள்.

**20 நிமிடங்கள்!**

மலேசியா தேசத்திற்கான ஜெபக் குறிப்புகளை தேவ சமூகத்தில் நினைவு கூர்ந்து ஜெபியுங்கள்.

**10 நிமிடங்கள்!**

உங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்பக் காரியங்களை தேவனுக்குத் தெரியப்படுத்தி ஜெபியுங்கள்.

உங்கள் ஜெபம் கேட்கப்பட்டதற்காக, தேவனுக்கு மகிமை செலுத்துங்கள்.

# இயேசுவே, மலேசியாவை ஆசீர்வதியும்!




## மொத்த மக்கள் தொகை சுமார் 32.4 மில்லியன்

### மக்கள் இனம்!

மலாய் – 52%
மலாய் அல்லாத பூமிபுத்ரா – 11%
சீனர்கள் – 24%
இந்தியர்கள் – 7%
வெளி நாட்டவர்கள் – 6%

### மதப் பிரிவுகள்!

இஸ்லாமியர் – 61.3%
புத்த மதத்தினர் – 19.8%
கிறிஸ்தவர்கள் – 9.2%
இந்துக்கள் – 6.3%
தாவோயிஸத்தினர் – 1.3%
மற்ற மதத்தினர் – 2.1%

### இந்தியர்கள்

தமிழர்கள் – சுமார் 18 லட்சம்
இலங்கை தமிழர்கள் – 30,000
தெலுங்கு மக்கள் – 1,11,000
மலையாளிகள் – 1,66,000
குஜராத்திகள் – 28,000

## ஒவ்வொரு மாநிலத்திற்காகவும், அதிலுள்ள மக்கள் இனத்திற்காகவும் கருத்தாக ஜெபியுங்கள்.

| மாநிலம் (சுமார்) | மக்கள் தொகை | மலாய் மக்கள் | சீனர்கள் | இந்தியர்கள் | மற்றவர்கள் | ஜெபிக்க வேண்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|
| 1. பெர்லீஸ் | 2,46,000 | 88% | 8% | 1.5% | 2.5% | 1&16 |
| 2. கெடா | 20,72,000 | 77.5% | 13.5% | 7% | 2% | 2&17 |
| 3. பினாங்கு | 16,63,000 | 43% | 45.5% | 10.5% | 1% | 3&18 |
| 4. பேராக் | 24,78,0005 | 4.2% | 30.4% | 12.4% | 3% | 4&19 |
| 5. கிளாந்தான் | 17,18,200 | 95% | 3.4% | 0.3% | 1.3% | 5&20 |
| 6. தெரங்கானு | 11,54,000 | 97% | 2.6% | 0.2% | 0.2% | 6&21 |
| 7. பஹாங் | 16,24,000 | 73.8% | 16% | 4.4% | 5.8% | 7&22 |
| 8. ஜோகூர் | 35,54,000 | 57% | 34% | 7% | 2% | 8&23 |
| 9. நெகிரி செம்பிலான் | 11,00,000 | 59.4% | 23.2% | 15.2% | 2.2% | 9&24 |
| 10. மலாக்கா | 8,73,000 | 66.9% | 26.4% | 5% | 1.7% | 10&25 |
| 11. சிலாங்கூர் | 58,75,000 | 55.8% | 28.6% | 13.6% | 2% | 11&26 |
| 12. சபா | 35,44,000 | 80க்கும் மேற்பட்ட இன மக்கள் வாழ்கிறார்கள் | | | | 12&27 |
| 13. சாராவாக் | 26,36,000 | பல்வேறு இன மக்கள் வாழ்கிறார்கள், கிறிஸ்தவர்கள் அதிகம் உள்ள மாநிலம் | | | | 13&28 |
| கூட்டரசு பிரதேசம் | | | | | | |
| கோலாலம்பூர் | 17,68,000 | 44.7% | 43% | 10.3% | 2% | 14&29 |
| லபுவான் | 97,000 | | | | | 15&30 |
| புத்ரஜெயா | 89,000 | | | | | |

# மலேசியாவிற்காக தேவனை ஸ்தோத்தரியுங்கள்!

**"...எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்."**
பிலிப்பியர் 4:6.

- மலேசியாவை கர்த்தர் நேசிக்கிறதற்காகவும், அங்கு வசிக்கிற எல்லா மக்களுக்காக இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதற்காகவும், அவரை ஸ்தோத்தரியுங்கள்.

- அப்போஸ்தலனாகிய **தோமா**வை கர்த்தர் இந்த தேசத்திற்கு அனுப்பியதற்காக, அனேக மிஷனெரிகளை அனுப்பி சுவிசேஷ ஒளியை பரவச் செய்ததற்காக, தேவனை ஸ்தோத்தரியுங்கள்.

- ஜீவனுள்ள தேவனை ஆராதிப்பதற்கு திறந்த வாசலை கர்த்தர் ஏற்படுத்தியதற்காக, எந்தத் தடையும் இல்லாமல் வேதாகமத்தை சுமந்து செல்லவும், ஆலயங்களைக் கட்டவும் சாதகமான சூழ்நிலைகளை கர்த்தர் தந்ததற்காக அவரை ஸ்தோத்தரியுங்கள்.

- மலேசியா தேசத்தில் நல்ல சமாதானத்தையும், செழிப்பையும், இயற்கை வளங்களையும், ஆசீர்வாதத்தையும் இம்மட்டும் கர்த்தர் தந்ததற்காக அவரை ஸ்தோத்தரியுங்கள்.

- எத்தனையோ ஆபத்துகள், இயற்கைச் சீற்றங்கள், தீவிரவாத அச்சுறுத்தல்கள் வந்த போதிலும், அதிகக் கேடு வராதபடி கர்த்தர் பாதுகாத்தபடியினால் அவரை ஸ்தோத்தரியுங்கள்.

- "மலேசியாவில் மகிமையான எழுப்புதல் வரும்!" என்று கர்த்தர் வாக்குப் பண்ணியதற்காக, மலேசியத் திருச்சபைகளுக்கு மாபெரும் அறுவடையின் காலம் நியமிக்கப்பட்டிருக்கிறதற்காக, கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள்.



# திருச்சபைகளின் எழுப்புதலுக்காக ஜெபியுங்கள்!

**"உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?"** சங்கீதம் 85:6.

- மலேசியாவில் தேவன் எழுப்பி இருக்கிற **Anglican, Lutheran, Methodist, Catholic, A.G., Salvation Army** திருச்சபைகள் மற்றும் எல்லா பெந்தேகொஸ்தே திருச்சபைகளுக்காக, திருச்சபைகளின் தலைவர்களுக்காக தேவனை ஸ்தோத்தரியுங்கள்.
- எல்லாத் திருச்சபை தலைவர்கள் மற்றும் விசுவாசிகள் மீதும் ஜெப ஆவி ஊற்றப்பட, அவர்கள் ஜெபத்தில் உறுதியாய் தரித்திருக்கத் தக்கதான கிருபையை தேவன் அவர்களுக்கு அருள மன்றாடுங்கள்.
- திருச்சபைகளில் சுத்திகரிப்பு உண்டாக ஜெபியுங்கள். திருச்சபைகளில் சமாதானம், ஐக்கியம் காணப்பட, போட்டி, பொறாமை விலக, சுயநலம், நிர்விசாரம், பண ஆசை, பதவி ஆசை, பரிசுத்தக் குலைச்சல்கள் மாற மன்றாடுங்கள்.
- மாம்ச இச்சைகளைத் தூண்டக் கூடிய எந்த விதமான தவறான ஆராதனைகள் திருச்சபைகளில் நுழைந்து விடாமலிருக்க, கள்ள உபதேசங்கள், செழிப்பின் உபதேசங்கள், கள்ள தீர்க்கதரிசனங்கள் சபைகளைத் தீட்டுப்படுத்தி விடாதபடி கர்த்தர் பாதுகாக்க ஜெபியுங்கள்.
- திருச்சபைகளில் ஆவியானவர் பலமாய் ஊற்றப்பட, மாம்சமான யாவர் மீதும், குமாரர்கள், குமாரத்திகள் மீது, வாலிபர்கள், கன்னிகைகள் மீது, மூப்பர்கள் மீது, தேவ ஊழியக்காரர்கள் மற்றும் ஊழியக்காரிகள் மீது கடைசிக் கால அபிஷேகம் நிறைவாய் இறங்க மன்றாடுவோம்.
- ஆதித் திருச்சபை அப்போஸ்தலர்களைப் போல ஒவ்வொரு திருச்சபைப் போதகர்களையும் கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்த, அவர்களின் பிரசங்கம் மற்றும் ஆராதனைகளில் ஆவியானவர் பலமாய் அசைவாட, பலத்த அற்புதங்கள் அவர்களுடைய கைகளால் நடைபெற பாரத்தோடு ஜெபியுங்கள்.
- வீடுகள்தோறும் ஜெப சத்தம் கேட்கப்பட, ஒவ்வொரு விசுவாசியும் ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களாக மாற, வல்லமை-வரங்கள் அவர்கள் மூலம் வெளிப்பட ஜெபியுங்கள்.
- எல்லா திருச்சபைகளும் வளர்ந்து பெருக, ஆசீர்வதிக்கப்பட, சொந்தக் கட்டிடங்கள், பிரம்மாண்டமான ஆலயங்கள் எழும்ப, அனுதினமும் ஆத்துமாக்கள் மந்தையில் சேர்க்கப்பட ஜெபியுங்கள்.

# போராடி ஜெபியுங்கள்!

**"...பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்."** யாக்கோபு 4:7.

- பலவானை (சாத்தானை) முந்திக் கட்டுங்கள். மக்களின் மனக் கண்களைக் குருடாக்குகிற இப்பிரபஞ்சத்தின் தேவனானவனின் கிரியைகளைக் கட்டுங்கள். **(மத்தேயு 12:29, 2 கொரி. 4:4).**

- ஜீவனுள்ள தேவனை அறிந்து கொள்ள விடாதபடி கிரியை செய்கிற வஞ்சிக்கிற ஆவிகள், பயமுறுத்துகிற ஆவிகள், மக்களை பாரம்பரிய சமுதாயக் கட்டுகளுக்குள் வைத்திருக்கிற ஆவிகள், மக்களை மயக்கி, இருளுக்குள் வைத்திருக்கும் ஆவிகளின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

- மந்திர மற்றும் பில்லி–சூனியங்களின் ஆவிகள் அழிக்கப்பட ஜெபியுங்கள். திருச்சபைகள் வளர முடியாதபடி செய்யப்படுகிற கிரியைகள், குடும்பங்களை சீரழிக்கிற சகல மந்திரக் கிரியைகள் முற்றிலுமாக செயல்படாமல் போக ஜெபியுங்கள்.

- குடி வெறி, போதை வஸ்துக்கள், விபச்சாரம் மற்றும் இச்சைகளைத் தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்பட ஜெபியுங்கள். குறிப்பாக, சிறு பிள்ளைகள் மற்றும் வாலிபப் பிள்ளைகளின் பரிசுத்தத்தைக் கெடுக்க நினைக்கிற ஆவிகளைக் கட்டி ஜெபியுங்கள்.

- மதக் கலவரங்கள், இனக் கலவரங்கள், சாலை விபத்துகள், தீவிரவாதம் போன்ற காரியங்களைத் தூண்டி இரத்தம் சிந்தப் பண்ணவும், மக்களின் சமாதானத்தைக் கெடுக்கவும் போராடுகிற ஆவிகளைக் கட்டி ஜெபியுங்கள்.

- வான மண்டலப் பொல்லாத ஆவிகளின் சேனைகளைத் துரத்துங்கள். காற்று மண்டலத்தின் வழியாக வருகிற ஆபாசங்கள் மற்றும் செல்போன், இன்டர்நெட் மற்றும் நியூ மீடியா வழியாக வருகிற அசுத்தங்கள் மூலமாகக் கிரியை செய்கிற ஆவிகள் கட்டப்பட ஜெபியுங்கள்.

# மன்றாடி ஜெபியுங்கள்!

**"...கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்."** கலாத்தியர் 4:19.

- "எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும்." என்பது, தேவனுடைய சித்தமாக இருக்கிறது. எனவே, எல்லா இன மக்களும் இரட்சிக்கப்பட, கர்த்தர் அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்த பாரத்தோடு ஜெபியுங்கள்.

- குறிப்பாக, இங்கு வசிக்கிற இந்திய மக்களில் அனேகர் பாவப் பழக்க வழக்கங்களுக்கு (குடிவெறி, இச்சைகள், மந்திர மற்றும் பில்லி–சூனியம்) அடிமைப்பட்டு இருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் மேல் மனமிரங்கி, அனைத்துப் பாவக் கட்டுகளிலிருந்தும் அவர்களை விடுதலையாக்க பாரத்தோடு ஜெபியுங்கள்.

- வாலிபர்கள் மற்றும் சிறு பிள்ளைகளின் பரிசுத்தத்திற்காக மன்றாடுங்கள். இந்த உலகத்தில் காணப்படுகிற பாவ சோதனைகளுக்குள் அவர்கள் சிக்கி, சீரழிந்து விழாதபடி தேவன் அவர்களைப் பாதுகாக்க, சின்ன சாமுவேலுக்கு கர்த்தர் தன்னை வெளிப்படுத்தியதைப்போல, சவுலைச் சந்தித்ததைப்போல, இவர்களும் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

- வெளி நாடுகளிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் இங்கு வந்து வேலை செய்து பிழைக்கிறார்கள். அவர்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.

- அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், பிரபலமானவர்கள், அரசு அதிகாரிகள் மற்றும் எல்லா பணி செய்கிற மக்களும் இரட்சிக்கப்பட பாரத்தோடு ஜெபியுங்கள்.



# ஆசீர்வாதத்திற்காக, பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்!

- மலேசியா தேசத்தின் விளை நிலங்கள் ஆசீர்வதிக்கப்பட, தொழில் வளம் பெருக, எல்லா மக்களும் வறுமை நீங்கி, செழிப்பாக வாழ ஜெபியுங்கள்.

- மலேசியா தேசத்தின் பெருளாதாரம் உயர்த்தப்பட, அதற்காக அரசியல் தலைவர்கள் எடுக்கிற அனைத்து முயற்சிகளையும் கர்த்தர் வாய்க்கப் பண்ண ஜெபியுங்கள்.

- அரசியல் தலைவர்களின் ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள். கர்த்தர் அவர்களை விசேஷித்த ஞானத்தினால் நிரப்பவும், நல்ல சட்ட திட்டங்களை செயல்படுத்தவும், அவர்களின் பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

- மலேசியா தேசத்தில் அமைதியும், சமாதானமும் காணப்பட, இனக் கலவரங்களையோ, மதப் பிரச்சனைகளையோ சத்துருவானவன் கொண்டு வராமலிருக்க ஜெபியுங்கள்.

- தீவிரவாதிகள் தேசத்தில் நுழைந்து விடாமலிருக்க ஜெபியுங்கள். அவர்கள் செய்ய நினைக்கிற எல்லா சதித் திட்டங்களும் வாய்க்காமல் போக ஜெபியுங்கள். தவறான நோக்கத்தோடு தேசத்திற்குள் ஒளிந்திருக்கும் தீவிரவாதிகள் பிடிபட ஜெபியுங்கள்.

- இயற்கைச் சீற்றங்கள், சுனாமி, கடும் புயல், நில நடுக்கங்கள் மற்றும் கொள்ளை நோய்கள் போன்ற பேரழிவுகள் தேசத்தில் வராமல், தேசம் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.



# முக்கியமான ஜெபக்குறிப்புகளை குறித்துவைத்து ஜெபியுங்கள்!

1. ..............................................................................

2. ..............................................................................

3. ..............................................................................

4. ..............................................................................

5. ..............................................................................

6. ..............................................................................

7. ..............................................................................

8. ..............................................................................

9. ..............................................................................

10. ............................................................................

11. ............................................................................

12. ............................................................................



# மலேசியாவில்

‘இயேசு விடுவிக்கிறார்’

# கெத்செமனே ஜெப மையம்!

மலேசியாவின் இரட்சிப்புக்காகவும்...

திருச்சபைகளின் எழுப்புதலுக்காகவும்...

உங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும்...

## ஜெபிக்க வாருங்கள்...

**நேரம்: தினமும் காலை 8:00 - மாலை 4:30**



*Address:* **Jesus Redeems Malaysia,**

Suite L9-9, Menara Sentral Vista,
150 Jalan Sultan Abdul Samad,
Brickfields (Behind the YMCA),
Kualalumpur, Malaysia-50470.

Ph: +60 32276 2219, +60 10766 4123. Email: br.kl@jesusredeems.org